வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 26.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று லடாக்கில் உள்ள சியாச்சின் ராணுவ முகாமிற்கு பயணம் மேற்கொண்டு பார்வையிட்டார்.

விஞ்ஞானிகளின் திறமைகளை முழுமையாக பயன்படுத்தி தேசத்திற்கான பங்களிப்பை அளிக்க கூடிய அளவில் தற்போதைய சூழல் உள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார்.

இந்தியாவில் உருவாக்கப்பட்ட 3 பரம்ருத்ரா சூப்பர் கம்ப்யூட்டர்களை பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

உலக சுற்றுலா தினத்தை ஒட்டி, புதுச்சேரியில் நாளை நடைபெற உள்ள நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

*திரவுபதி முர்மு*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று லடாக்கில் உள்ள சியாச்சின் ராணுவ முகாமிற்கு பயணம் மேற்கொண்டு பார்வையிட்டார். முன்னதாக டாய்ஸ் விமான நிலையம் வந்தடைந்த அவரை லடாக் துணை நிலை ஆளுநர் டாக்டர் பி டி மிஸ்ரா வரவேற்றார். தொடர்ந்து சியாச்சின் ராணுவதள முகாமிற்கு சென்று சியாச்சின் பனிப் பாறை நிறைந்துள்ள பகுதிகளில் நியமிக்கப்பட்டுள்ள வீரர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். அங்குள்ள போர் வீரர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். கடுமையான கால நிலை, தீவிரநிலைமைகளுக்கு சவாலாக நாட்டை பாதுகாப்பதில் வீரர்களின் துணிச்சலையும், சேவைகளையும் பாராட்டிய அவர் அங்கு பணியில் அமர்த்தப்பட்டுள்ள ராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். முன்னாள் குடியரசு தலைவர்கள் அப்துல்கலாம், திரு ராம்நாத் கோவிந்த, ஆகியோருக்கு பிறகு சியாச்சின் பனி மலைக்கு செல்லும் 3-ஆவது குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு ஆவார்.

*தன்கர்*

அறிவியல் உலகில் இந்தியா தனது கடந்த கால பெருமையை மீட்டெடுக்கும் பாதையில் சென்று கொண்டு இருக்கிறது என குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில்

இன்று நடைபெற்ற சிஎஸ்ஐஆரின் 83-ஆவது நிறுவன தின விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு பேசிய அவர் கடந்த காலத்தில் இந்தியா அறிவியல் அறிவில் சிறந்து விளங்கியதாகவும் உலகையே பெருமைப்படுத்தியதாகவும் கூறினார். மேலும் அவர் கூறுகையில் விஞ்ஞானிகள் தங்கள் திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி தேசத்திற்கு தங்களது பங்களிப்பை அளிக்க கூடிய அளவில் தற்போது சூழல் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் போது நம் தேசத்தின் அறிவியில் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய சிஎஸ்ஐஆரின் பங்களிப்பை பாராட்டிய அவர் கண்காட்சியை திறந்து வைத்து என்ஏஎஸ்சி வளாகத்தில் மரக் கன்றையும் நட்டு வைத்தார்.

*மோடி-மகாராஷ்டிரா*

பிரதமர் திரு நரேந்திர மோடி தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் இயக்கத்தின் கீழ் மொத்தம் 130 கோடி ரூபாய் செலவில், முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு, புனே, டெல்லி மற்றும் கொல்கத்தாவில் நிறுவப்பட்டுள்ள 3 பரம் ருத்ரா சூப்பர் கம்ப்யூட்டர்களை இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்க உள்ளார். இந்த தொடக்க நிகழ்ச்சியில் பெருமளவில் இளைஞர்கள் கலந்து கொள்ள வேண்டுமென தனது சமூக வலைதள பதிவின் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

*மேக்ரான்*

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக இந்தியாவை சேர்ப்பதற்கு பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மேக்ரான் வலுவான ஆதரவை தெரிவித்துள்ளார். இன்று காலை நியுயார்க்கில் நடைபெற்ற ஐ நா பொதுச் சபையின் 79-ஆவது அமர்வில் பொது விவாதத்தில் உரையாற்றும் போது திரு மேக்ரான இவ்வாறு கூறினார். மேலும் ஜெர்மனி, ஜப்பான், பிரேசில் ஆகிய நாடுகளும் நிரந்தர உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என பிரான்ஸ் அதிபர் வலியுறுத்தினார். முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோ பைடன், ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு செர்ஜி லாவ்ரோவ் மற்றும் சிலி அதிபர் திரு கேப்ரியல் போரிக் உட்பட பிற உலகத் தலைவர்களும் ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினராக ஆக வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

*பிரதமர்-அரியானா*

வருகின்ற சட்டமன்ற தேர்தலில் அரியானா மக்கள் பாஜக-விற்கு மீண்டும் பணியாற்ற வாய்ப்பளிப்பார்கள் என்று பாஜகவின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார். அரியானாவில் இன்று பாஜக நிர்வாகிகளுடன் நமோ-செயலி மூலம் காணொளி காட்சியில் உரையாடிய அவர் மாநிலத்தில் ஊழல் இல்லாத ஆட்சியை பாஜக நடத்தி வருவதாக கூறினார். மாநில

இளைஞர்கள் நேர்மையான முறையில் வேலை வாய்ப்பினை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். கோஷ்டி பூசல், உட்கட்சி பூசல் மற்றும் ஒருவரை ஒருவர் சமாளிப்பது உள்ளிட்ட நடைமுறைகளை பின்பற்றும் காங்கிரஸ் போன்ற கட்சிகள் அரியானா மக்களின் நம்பிக்கையை ஒருபோதும் பெற முடியாது என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

*நிர்மலா*

உஸ்பெகிஸ்தான் நாட்டுடன் டிஜிட்டல் தொழில் நுட்பம், புதுப்பிக்க வல்ல எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும் தமது இந்த பயணம் பயன் உள்ள வகையில் அமைந்ததாகவும் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். அரசு முறைப் பயணமாக உஸ்பெகிஸ்தான் சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் அந்நாட்டு அதிபர், துணைப் பிரதமர் மற்றும் வர்த்தக தொழில் துறை அமைச்சரோடு மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளில் இருநாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார். பசுமை தொழில் நுட்பம், வானிலை தொடர்பான செயல்பாடுகளில் உஸ்பெகிஸ்தான் அளித்து வரும் ஒத்துழைப்பினை திருமதி நிர்மலா சீதாராமன் பாராட்டினார்.

இந்த இருதரப்பு பேச்சு வார்த்தைக்கு பின்னர், இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தான் இடையிலான இருதரப்பு உறவு மேலும் வலுப்பெற்றுள்ளதாகவும் இரு நாடுகளும் வரலாற்று தொடர்பை கொண்டவை என்றும் உஸ்பெகிஸ்தான் அதிபர் திரு Shavkat Mirziyoyev கூறினார்.

***ஊட்டச்சத்து மாதம்***

மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூரணா தேவி குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல் ஆகியோரால் காந்தி நகரில் தொடக்கப்பட்ட 7-ஆவது தேசிய ஊட்டச்சத்து மாதம் 2024- எனும் ஒரு மாத கால இயக்கத்தில் இதுவரை நாடு முழுவதும் 9.22 கோடிக்கும் அதிகமான செயல்பாடுகளுடன் அடித்தள நிலையில் ஊட்டச்சத்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்த சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாக மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த இயக்கத்தின் மூலம் ரத்தசோகை இல்லாத இந்தியாவை உருவாக்க தேவையான நடவடிக்கைகள், தொழில் நுட்பம் சார்ந்த தீர்வுகளான போஷான் டிராக்கர் செயலி உருவாக்கம், ஒவ்வொரு வீட்டிலும் ஊட்டச் சத்து விழிப்புணர்வை ஊக்குவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஜம்மு-தேர்தல்*

ஜம்மு-காஷ்மீரில் 40 தொகுதிகளுக்கான 3-ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குப் பதிவு வரும் ஒன்றாம் தேதி நடைபெறுவதை ஒட்டி, அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது. பிஜேபி மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா இன்று கத்துவா, உத்தம்பூர், உள்ளிட்ட பகுதிகளில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் பங்கேற்கிறார். நாளை மறுநாள் ஜம்முவில் பாஜக சார்பில் நடைபெறும் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி பங்கேற்க உள்ளார். முன்னதாக மக்களவை எதிர்கட்சி தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான திரு ராகுல்காந்தி, மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் மெகபூபா முஃப்தி ஆகியோர் அவரவர் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

*மேக் இன் இண்டியா*

மருந்து தொழில் நுட்பம் மற்றும் மருந்தியல் நிறுவனங்களின் தொழிற்சாலைகள் மூலம் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகரித்து உள்ளதாக மருந்தியல் துறை செயலர் திரு அருணீஷ் சாவ்லா தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று வருடாந்திர மருந்தியல் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், நமது நாட்டின் 4-ஆவது பெரிய ஏற்றுமதி துறையாக மருந்தியல் துறை திகழ்கிறது என பாராட்டி

பேசினார். கடந்த ஆண்டு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 50 சதவிகிதத்திற்கும் அதிகமான மருந்துகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் வருங்காலங்களில் இத்துறையில் அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேக் இன் இண்டியா திட்டம் நம் தேசத்தை ஆற்றல் மிகு உற்பத்தி மையமாக மேம்படுத்தி இருப்பதாகவும், இதில் மருந்து தயாரிக்கும் தொழில் நிறுவனங்கள் பெரும் பங்காற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

*உலக சுற்றுலா தினம்*

புதுச்சேரியில் உலக சுற்றுலா தினத்தை ஒட்டி, நாளை காலை 9.30 மணிக்கு புதுச்சேரி பழைய துறைமுக வளாகத்தில் உள்ள புதுப்பிக்கப்பட்ட மாநாட்டுக் கூடத்தில் நடைபெற உள்ள துவக்க விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு விழாவை தொடங்கி வைக்க உள்ளார். இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான் உள்ளிட்ட அரசு துறை அதிகாரிகளும் கலந்து கொள்ள உள்ளனர். உலக சுற்றுலா தினத்தை ஒட்டி, பல்வேறு போட்டிகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

நமச்சிவாயம்

புதுச்சேரி உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் உடல் நலக் குறைவால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவரை தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி கே வாசன் மருத்துவமனையில் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்தார். தொடர்ந்து சிகிச்சைக்கு பின்னர் பூரண நலம் பெற்று அமைச்சர் திரு நமச்சிவாயம் வீடு திரும்பினார்.

போக்குவரத்து போலீஸ்

புதுச்சேரி போக்குவரத்து காவல் துறையினரால் பல்வேறு போக்குவரத்து விதி மீறல்களுக்காக கடந்த 2022- முதல் 2024- வரையிலான ஆண்டுகளில் போக்குவரத்து விதி மீறியவர்கள் மீது ஸ்பாட் பைன் இயந்திரம் மூலம் இ-சலான் வழங்கப்பட்டவர்கள் பலர் இதுவரை அபராத தொகையை செலுத்தாமல் உள்ளதாக போக்குவரத்து தலைமையக காவல் கண்காணிப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அபராதம் செலுத்தாமல் உள்ளவர்கள் வருகின்ற அக்டோபர் 1-ஆம் தேதியில் இருந்து 7-ஆம் தேதி வரை புதுச்சேரியில் உள்ள சம்பந்தப்பட்ட 4 போக்குவரத்து காவல் நிலையங்கள் மூலமாகவோ அல்லது பரிவாகன் என்கிற செயலி மூலமாகவோ அபராதத்தை உடனடியாக செலுத்த வேண்டும் என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செலுத்தாதவர்கள்

மீது நீதிமன்ற நடவடிக்கை மற்றும் ஓட்டுனர் உரிமம் ரத்து அல்லது இடைக்காலத் தடை செய்ய போக்குவரத்து துறைக்கு பரிந்துரைக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

*பிஆர்டிசி*

புரட்டாசி மாதத்தை ஒட்டி, புதுச்சேரியில் இருந்து திருப்பதிக்கு நாளை முதல் அக்டோபர் மாதம் 20-ஆம் தேதி வரை சிறப்பு பேருந்து இயக்க புதுச்சேரி அரசின் சாலைப் போக்குவரத்து கழகம் ஏற்பாடு செய்துள்ளது. அதன்படி புதுவையில் இருந்து திருப்பதிக்கு இந்த சிறப்பு பேருந்து இரவு 9.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 3 மணிக்கு திருப்பதி சென்றடையும். மறுமார்கத்தில் திருப்பதியில் இருந்து காலை 8.30 மணிக்கு இந்த சிறப்பு பேருந்து புறப்படும். இதுமட்டுமல்லாமல் புதுச்சேரியில் இருந்து திருப்பதிக்கு நாள் தோறும் வழக்கமாக காலை 8.45 மணிக்கும் இரவு 10 மணிக்கும் பிஆர்டிசி பேருந்துகள் இயக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

*குமாரசாமி*

மத்திய அரசு எங்கெல்லாம் எஃகு தொழிற்சாலைகளை நிறுவுகிறதோ அங்கெல்லாம் கார்பன் வெளியேற்றத்தை குறைக்கவும், பசுமையை அதிகரிக்கவும் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய எஃகு மற்றும் கனரக தொழில் துறை அமைச்சர் திரு எச் டி

குமாரசாமி தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் தாயின் பெயரில் ஒரு மரம் நடும் திட்டத்தின் கீழ் மரக் கன்றுகளை நட்டு வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் பாரீஸ் ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எட்டவும் 2030- க்குள் நிகர பூஜ்ய உமிழ்வை அடையவும் இத்திட்டம் வழி வகை செய்யும் என நம்பிக்கை தெரிவித்தார்.

முக ஸ்டாலின்

தமிழக அரசின் நலத் திட்டங்களுக்கான மத்திய நிதியைப் பெறுவதற்காக அம்மாநில முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று மாலை புதுடெல்லி புறப்பட்டுச் சென்றார். இதுதொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடியை நாளை அவர் நேரில் சந்தித்து கலந்துரையாட உள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று லடாக்கில் உள்ள சியாச்சின் ராணுவ முகாமிற்கு பயணம் மேற்கொண்டு பார்வையிட்டார்.

விஞ்ஞானிகளின் திறமைகளை முழுமையாக பயன்படுத்தி தேசத்திற்கான பங்களிப்பை அளிக்க கூடிய அளவில் தற்போதைய சூழல் உள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார்.

இந்தியாவில் உருவாக்கப்பட்ட 3 பரம்ருத்ரா சூப்பர் கம்ப்யூட்டர்களை பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

உலக சுற்றுலா தினத்தை ஒட்டி, புதுச்சேரியில் நாளை நடைபெற உள்ள நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 26.9.2024/Script/

-----------------------